JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **37/2016** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 5** | Prosecution /Defence / Court | |
| Name | ராமசாமி | Village | வாய்க்கால்பாலம், சென்னிமலை |
| Father's Name | கருப்பண்ணன் | Taluk | |
| | | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 12.01.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தேங்காய் பறிக்கும் வேலை பார்த்து வருகிறேன். விபத்தில் காயம் பட்டு இறந்து போன மாரிமுத்து என் உறவினர் ஆவார். விபத்து பற்றி எனக்கு தெரிந்த நபர் ஒருவர் தொலைபேசியில் கூறியதின் பேரில் நான் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு வந்து விபத்தில் காயம் பட்டு இறந்து போன மாரிமுத்துவை பார்த்தேன். மாரிமுத்துவுக்கு தலையில் பலத்த காயம் பட்டிருந்தது. உடலில் பல பாகங்களிலும் காயம் பட்டு இறந்து போயிருந்தார். பெருந்துறை அரசு மருத்துவமனையில் நான் இருந்த போது சென்னிமலை காவல் நிலைய ஆய்வாளர் மாரிமுத்துவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட போது நான் உடனிருந்தேன். பிரேதத்தை அடையாளம் காட்டினேன். என்னை சென்னிமலை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை